
PRIMARY SCHOOL

SEMESTRAL ASSESSMENT 2 - 2014

TAMIL LANGUAGE - COMPOSITION

PRIMARY 6

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.



| | |
|---|---|
| கவனிக்கவில்லை | விழுந்துவிட்டான் |
| கையை உயர்த்தி | சிரித்தான் |
| வெண்பலகையில் | கோபித்துக்கொண்டார் |
| வேடிக்கையாக | முகத்தைத் திருப்பி |

**PRIMARY SCHOOL**

**SEMESTRAL ASSESSMENT 1 - 2014**

**TAMIL LANGUAGE - PAPER 2**

**PRIMARY 6**

பெயர் : ______________________

வகுப்பு : தொடக்கநிலை 5 /___

தேதி : __________

நேரம் : 1 மணி 40 நிமிடங்கள்

பெறவேண்டிய மதிப்பெண்கள் : 90

பெற்ற மதிப்பெண் : _____

---

## மாணவர்களுக்கான குறிப்புகள்

1. கொடுக்கப்பட்டிருக்கும் எல்லாக் கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும்.
2. கேள்விகளுக்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கங்களை நன்றாகப் படிக்கவும்
3. நேரத்தை வீணாக்காமல் தெரிந்தவற்றை முதலில் செய்யவும்.

## ‘அ’ பிரிவு

**A1 வேற்றுமை**

**Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(12 மதிப்பெண்கள்)**

ராகுல் தன் நண்பன் சூரியாவுக்காக பொது நூலகத்தில் முப்பது நிமிடங்களாகக் காத்துக்கொண்டிருந்தான். (1)______________ ஐந்து மணிக்கு வருவதாகக் கூறிய சூரியாவை இன்னும் காணவில்லை. அருகிலிருந்த பொது (2)__________________ கொண்டு சூரியாவின் வீட்டுக்கு ராகுல் தொடர்புகொண்டான். ``சூரியா வீட்டில் இருக்கிறானா?`` என்று வினவினான் ராகுல். ``சூரியாவை அவன் பெற்றோர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர்.`` என்றார் (3)__________________ தாத்தா. இதைக் கேட்ட ராகுல் திடுக்கிட்டான். ``சூரியாவிற்கு என்ன ஆயிற்று?`` என்று (4)__________________ கேட்டான். அதற்குத் தாத்தா ``சூரியா (5)__________________ விழுந்துவிட்டான். அவனுக்கு கை முறிவு ஏற்பட்டுள்ளது.`` என்றார். ``அவனை நான் (6)______________ வந்து பார்க்கிறேன்.`` என்று கூறி வருத்தத்துடன் தொலைபேசியை ராகுல் வைத்தான்.

| | | |
|---|---|---|
| Q 1 | (1) | நூலகத்தில் |
| | (2) | நூலகத்திற்கு |
| | (3) | நூலகத்தை |
| | (4) | நூலகத்திலிருந்து |

| | | |
|---|---|---|
| Q 2 | (1) | தொலைபேசியில் |
| | (2) | தொலைபேசியால் |
| | (3) | தொலைபேசியை |
| | (4) | தொலைபேசியுடன் |

| | | |
|---|---|---|
| Q 3 | (1) | சூரியாவுடன் |
| | (2) | சூரியாவுக்கு |
| | (3) | சூரியாவுடைய |
| | (4) | சூரியாவோடு |

| | | |
|---|---|---|
| Q 4 | (1) | பதற்றதால் |
| | (2) | பதற்றத்தில் |
| | (3) | பதற்றத்தின் |
| | (4) | பதற்றத்துடன் |

| | | |
|---|---|---|
| Q 5 | (1) | மாடியிலிருந்து |
| | (2) | மாடியால் |
| | (3) | மாடியோடு |
| | (4) | மாடியின் |

| | | |
|---|---|---|
| Q 6 | (1) | வீட்டின் |
| | (2) | வீட்டில் |
| | (3) | வீட்டிலிருந்து |
| | (4) | வீட்டினது |

A2 செய்யுள் / பழமொழி

**Q7** முதல் **Q12** வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

| Q7 | சிறு ______________ பல் குத்த உதவும். | |
|---|---|---|
| | (1) | குச்சியும் |
| | (2) | துரும்பும் |
| | (3) | கரும்பும் |
| | (4) | சுள்ளியும் |

( )

| Q8 | நிழலின் அருமை __________________ தெரியும். | |
|---|---|---|
| | (1) | வெப்பத்தில் |
| | (2) | வெளியில் |
| | (3) | அனலில் |
| | (4) | வெயிலில் |

( )

| Q9 | கெடுப்பதூஉம் __________________ சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை. | |
|---|---|---|
| | (1) | நல்லாருக்கும் |
| | (2) | தீயவருக்கும் |
| | (3) | கெட்டார்க்கு |
| | (4) | கெட்டவருக்கும் |

( )

| Q10 | மோப்பக் குழையும் __________________ முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. | |
|---|---|---|
| | (1) | அனிச்சம் |
| | (2) | அணிந்து |
| | (3) | அணியும் |
| | (4) | அச்சம் |

( )

| | |
|---|---|
| Q11 | எரிகிற விளக்கானாலும் ________________ வேண்டும். |
| (1) | ஊன்றுகோல் |
| (2) | கொடுங்கோல் |
| (3) | தூண்டுதல் |
| (4) | தூண்டுகோல் |

( )

| | |
|---|---|
| Q12 | மகன்தந்தைக்கு ஆற்றும் ____________ இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல். |
| (1) | சேவை |
| (2) | பணி |
| (3) | உதவி |
| (4) | தொண்டு |

( )

B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்
பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.

கருத்தறிதல் பகுதி

ஓர் ஊரில் கோபு என்னும் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மனைவியின் பெயர் கயல்விழி. இருவரும் இசையிலும் பாடுவதிலும் சிறந்து விளங்கி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு நாள் கோபு வியாபார நிமித்தமாகக் கடை வீதி வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே மாதவி என்னும் பெண் நடனம் ஆடிக்கொண்டிருந்தாள். அவள் நடனமாடுவதில் மிகவும் சிறந்தவள். மேலும் யாழ் என்னும் இசைக்கருவியையும் மிக நன்றாக வாசிப்பாள். ஆனால் என்றும் கர்வம் கொண்டதே கிடையாது. அதனால் அவளுடைய நடனத்தைப் பார்க்க மக்கள் அனைவரும் கூடியிருந்தார்கள்.

கோபு வாணிகம் செய்து வந்ததால் அவனிடம் செல்வம் குவிந்து கிடந்தது. அவனுக்கு நடனம், இசை, நாடகம் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால் அவனும் மாதவியின் நடனத்தைப் பார்க்க விரும்பினான். நடனமும் ஆரம்பித்தது. மக்கள் தங்களை மறந்து நடனத்தை ரசித்துக் கொண்டிருந்தார்கள். கோபுவும் கடைக்குச் செல்வதைக் கூட மறந்து நின்றுவிட்டான். இசைக் கலைஞர்கள் இசைக் கருவிகளை மெய்ம்மறந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள். பாடல் பாடுபவர்கள் தங்களின் இனிமையான குரலில் பாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ஒரு யானை தூரத்தில் ஓடி வந்து கொண்டிருந்தது. அந்த யானைக்கு மதம் பிடித்திருந்ததால் பார்ப்பவர்கள் எல்லாரையும் தூக்கி எறிந்து கொண்டிருந்தது.

யானை, மாதவி ஆடும் மேடையை நோக்கி வருவதை அறிந்த மக்கள் கூட்டம் சிதறி ஓடியது. பயந்த மாதவி என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றுவிட்டாள். யானையோ மேடைக்கு மிக அருகில் வந்துவிட்டது. இசைக்கலைஞர்களும் பாடகர்களும் தங்களின் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்துகொண்டார்கள். வீரம் நிறைந்த கோபு மேடையில் ஏறி உரத்த குரலில் இனிமையாகப் பாடத் தொடங்கினான்.

மாதவியை அழைத்து நடனத்தை நிறுத்தாமல் ஆடச் சொன்னான். இசைக்கருவியை வாசித்துகொண்டே கோபு பாடுவதையும் மாதவி ஆடுவதையும் கண்ட யானை அப்படியே மயங்கி நின்று விட்டது. கோபு தன்னுடைய புத்திசாலித்தனத்தாலும் இசைத் திறமையாலும் தன்னைக் காப்பாற்றியதால் மாதவி கோபுக்கு நன்றி கூறினாள்.

**Q13** முதல் **Q17** வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. அவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(10 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q13 | மாதவி எவற்றில் சிறந்து விளங்கினாள் ? | |
| | (1) | அவள் நாட்டியம் ஆடுவதிலும் பாடுவதிலும் |
| | (2) | அவள் யாழ் வாசிப்பதிலும் பாடுவதிலும் |
| | (3) | அவள் நாட்டியத்திலும் யாழ் இசைப்பதிலும் |
| | (4) | அவள் இனிமையாக பாடுவதிலும் இசை வாசிப்பதிலும் |

( )

| | | |
|---|---|---|
| Q14 | யானை ஓடி வரக் காரணம் என்ன ? | |
| | (1) | மாதவியின் நடனத்தைப் பார்க்க |
| | (2) | அதற்கு மதம் பிடித்திருந்ததால் |
| | (3) | இசைக்கலைஞர்கள் இசைக்கருவிகளை வாசிப்பதைக் கேட்க |
| | (4) | பாடகர்கள் இனிமையாக பாடுவதைக் கேட்க |

( )

| | | |
|---|---|---|
| Q15 | மாதவி ஏன் ஆடுவதை நிறுத்தினாள் ? | |
| | (1) | யானை மேடையை நோக்கி வந்ததால் |
| | (2) | இசைக்கலைஞர்களும் பாடகர்களும் ஓடி ஒளிந்ததால் |
| | (3) | கோபுவின் பாடலுக்கு ஆட வேண்டும் என்பதால் |
| | (4) | மக்கள் சிதறி ஓடியதால் |

( )

| | | |
|---|---|---|
| Q16 | கோபு ஏன் மாதவியை நிறுத்தாமல் ஆடச் சொன்னான் ? | |
| | (1) | யானை மாதவியைப் பார்த்து வியந்து நிற்க |
| | (2) | கோபு இனிமையாகப் பாடத் தொடங்கியதால் |
| | (3) | மக்கள் பயந்து ஓடாமல் இருக்க |
| | (4) | யானையை மயக்கமடையச் செய்ய |

( )

| | | |
|---|---|---|
| Q17 | கோபு மாதவியை எவ்வாறு யானையிடமிருந்து காப்பாற்றினான் ? | |
| | (1) | கோபு மாதவியை தொடர்ந்து ஆடச் சொல்லி |
| | (2) | தனது அறிவாற்றலாலும் இசையாற்றலாலும் |
| | (3) | கோபு இசைக்கருவியை இசைத்துக்கொண்டு பாடி |
| | (4) | கோபு உரத்த குரலில் இனிமையாகப் பாடி |

( )

**B4 சொற்பொருள்**

**Q18** முதல் **Q20** வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. **(6 மதிப்பெண்கள்)**

| | | | |
|---|---|---|---|
| Q18 | வாசிப்பாள் | (1) | படிப்பாள் |
| | | (2) | மீட்டுவாள் |
| | | (3) | தட்டுவாள் |
| | | (4) | தீட்டுவாள் |

( )

| | | | |
|---|---|---|---|
| Q19 | கர்வம் | (1) | பொறாமை |
| | | (2) | ஆணவம் |
| | | (3) | மதிப்பு |
| | | (4) | பேராசை |

( )

| | | | |
|---|---|---|---|
| Q20 | திகைத்து | (1) | ஆச்சிரியப்பட்டு |
| | | (2) | அச்சமுற்று |
| | | (3) | ஐயமுற்று |
| | | (4) | அதிர்ச்சியுற்று |


( )

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்
பின் வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி:

# விலங்கியல் தோட்டத்தில்

# மாபெரும் விடுமுறை கொண்டாட்டம்

14/12/ 2013



டிசம்பர் மாத விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க குடும்பத்தோடு இந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
பல கேளிக்கை விளையாட்டுகளில் ஈடுபடலாம்.
உடன் வரும் மூத்த குடிமக்களுக்கு அனுமதி இலவசம்

பெயரைப் பதிவு செய்யும் முதல் ஐம்பது பேர்களுக்கு ஓர் அழகிய குடை அன்பளிப்பாக அளிக்கப்படும்

மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தும் பல மிருகங்கள் கலந்துகொள்ளும் மிருகக்காட்சிகளைக் காணலாம்.
மனதைக் கவரும் மிருகங்கள் செய்யும் தந்திரங்களைக் கண்டு களிக்கலாம்.

நுழைவுக் கட்டணம் 10 வெள்ளித்தான். இலவச உணவும் வழங்கப்படும்.
5 அல்லது அதற்கும் அதிகமான குடும்ப உறுப்பினர்களுடன் வருவோர் சில மிருகங்களுடன் புகைப்படம எடுக்கலாம்.

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கததில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 மதிப்பெண்கள்)

| Q21 | விலங்கியல் தோட்டத்தில் கொண்டாட்டம் நடைபெறுவதற்கான நோக்கம் என்ன ? |
|---|---|
| (1) | குடும்பத்துடன் மிருகக்காட்சிகளைக் கண்டு கழிக்க |
| (2) | குடும்பத்துடன் மிருகங்களுடன் புகைப்படம் எடுக்க |
| (3) | குடும்பத்துடன் டிசம்பர் மாத விடுமுறையைக் கழிக்க |
| (4) | குடும்பத்துடன் கேளிக்கை விளையாட்டில் கலந்துகொள்ள |

( )

| Q22 | ஆறு குடும்ப உறுப்பினர்களுடன் வரும் மூத்த குடிமக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் என்ன ? |
|---|---|
| (1) | அனுமதி இலவசமும் அழகிய குடையும் |
| (2) | அனுமதி இலவசமும் மிருகங்களுடன் புகைப்படம் எடுப்பதுவும் |
| (3) | இலவச உணவும் அழகிய குடையும் |
| (4) | மிருகங்களுடன் புகைப்படம் எடுப்பதுவும் அழகிய குடையும் |

( )

| Q23 | யாருக்கு அழகிய குடை அன்பளிப்பாக வழங்கப்படுகிறது ? |
|---|---|
| (1) | முதலில் வரும் ஐம்பது பேர்களுக்கு |
| (2) | முதலில் வரும் மூத்த குடிமக்களுக்கு |
| (3) | முதலில் பெயரைப் பதிவு செய்யும் ஐம்பது பேர்களுக்கு |
| (4) | முதலில் பெயரைப் பதிவு செய்பவர்களுக்கு |

( )

## ‘ஆ’ பிரிவு

### C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் **Q24** முதல் **Q28** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. **(10 மதிப்பெண்கள்)**

| | | |
|---|---|---|
| Q24 | அம்மா காணாமல் போன தன் மகளை தேடி அலைந்தார். திடீரென்று தன் மகளைக் கண்டதும் அவர் அவளைக் கட்டி ________ முத்தமிட்டார். | Q24 ( ) |
| Q25 | ஆசிரியர் திருத்திக் கொடுத்த தமிழ் தேர்வுத்தாளைப் பார்த்தேன். அதில் எனக்கு ________ மதிப்பெண்கள் கிடைத்தைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். | Q25 ( ) |
| Q26 | ஓய்வு நேரத்தில் நானும் என் குடுபத்தினரும் திரையரங்கிற்குச் சென்றோம். அங்கே நாங்கள் ஒரு தமிழ் திரைப்படத்தைக் கண்டு ________ வீடு திரும்பினோம். | Q26 ( ) |
| Q27 | நாங்கள் இரவு உணவிற்காக அம்மா ________ கோழியைச் சாப்பிட்டோம். அது மிகவும் சுவையாக இருந்ததால் நாங்கள் எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்தோம். | Q27 ( ) |
| Q28 | அப்பா சந்தைக்குச் சென்று நிறைய பொருள்கள் வாங்கினார். பை மிகவும் கனமாக இருந்ததால் அதை அவர் தன் ________ மீது தூக்கிக் கொண்டு வந்தார். | Q28 ( ) |

| | | | |
|---|---|---|---|
| (1) | கழித்து | (2) | பொறித்த |
| (3) | தோள் | (4) | என்பது |
| (5) | அனைத்து | (6) | தோல் |
| (7) | எண்பது | (8) | அணைத்து |
| (9) | பொரித்த | (10) | களித்து |

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்றறிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| வித்யா என்னும் சிறுமி ஒரு கிராமத்தில் வசித்தாள். | |
| அவளுக்கு அனைவருக்கும் உதவும் ___(29)___ குணம் | Q29 ( ) |
| இருந்தது. ஆனால் கண் தெரியாத அவளால் எதுவும் செய்ய | |
| முடியவில்லை. ஒருநாள் இரவில் தன் ___(30)___ எண்ணி | Q30 ( ) |
| அவள் குமுறி குமுறி அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது | |
| ஓர் உருவம் தன் அருகே வந்ததை அவள் ___(31)___. | Q31 ( ) |
| | |
| \`சின்னப்பெண்ணே, ஏன் அழுகிறாய் ?\` என்று ஒரு | |
| குரல் கேட்டது. \`யார் நீ ?\` என்று வித்யா ___(32)___ | Q32 ( ) |
| கேட்டாள். \`பயப்படாதே, நான் ஒரு விண்வெளி மனிதன். | |
| அனைவருக்கும் உதவவே நானும் என் நண்பர்களும் பூமிக்கு | |
| விண்வெளிக் கப்பல் மூலம் வந்திருக்கிறோம். உன் | |
| குறையைக் கூறு. நான் உதவ முயல்கிறேன்,\` என்றான் அந்த | |
| மனிதன். வித்யா தன் நிலைமையை எடுத்து ___(33)___. | Q33 ( ) |
| உடனே அம்மனிதன் வித்யாவைத் தன் விண்வெளிக் | |
| கப்பலுக்கு அழைத்துச் சென்றான். அவன் அவளுக்கு | |
| இரண்டு மின்சாரக் கண்களைக் கவனத்துடன் ___(34)___ | Q34 ( ) |
| விட்டான். | |
| | |
| \`\`வித்யா, சக்திமிக்க இக்கண்களைக் கொண்டு நீ | |
| மனிதச் சமுதாயத்திற்கு அரிய ___(35)___ செய்வேன் | Q35 ( ) |
| என்று உறுதி கூறுகிறாயா ?\`\` என்றான் அந்த விண்வெளி | |
| மனிதன். \`அப்படியே செய்கிறேன்,\` என்றாள் வித்யா. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (1) | அணிந்து | (2) | தங்கமான | (3) | பார்த்தாள் |
| (4) | பசுமையான | (5) | உணர்ந்தாள் | (6) | வினவினாள் |
| (7) | பொருத்தி | (8) | நிலைமையை | (9) | சேவைகளை |
| (10) | அச்சத்துடன் | (11) | துணிவுடன் | (12) | உரைத்தாள் |

## D8 சுயவிடைக் கருத்தறிதல்

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஓர் ஊரில் மரவேலை செய்யும் தச்சன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் வீரப்பன். அவனுக்கு வேலப்பன் என்ற மகன் ஒருவன் இருந்தான். வீரப்பனின் தந்தை மிகவும் வயதானவர். அவரால் முன்போல் ஓடியாடி வேலை செய்ய முடியாது. அவருடைய மகன் வீட்டிலேயே வந்து தங்கியிருந்தார். தன்னுடைய தந்தை தன்னுடன் வசிப்பது வீரப்பனுக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி அவரைத் திட்டுவான். வயதான கிழவர் வேறு வழியில்லாததால் அனைத்தையும் பொறுமையுடன் சகித்து வந்தார்.

இந்த நிலையில் வீரப்பனின் தந்தைக்குக் கடுமையான நோய் கண்டது. வீரப்பன் அவருக்காகத் தனி இடத்தை அமர்த்தி விட்டான். அங்கிருந்து அவர் அப்படி இப்படி நகரக் கூடாது என்று கட்டளை போட்டான். அவர் சாப்பிடும் தட்டு முதலியவற்றை மற்றவர்கள் தொடக்கூடாது என்று வீட்டில் இருந்தவர்களுக்கு உத்தரவு போட்டான். இதற்காக அவருக்கு ஒரு மண் சட்டியை வாங்கித் தந்தான்.

ஒரு நாள் கிழவர் சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்தபோது அது கை தவறி விழுந்து உடைந்துவிட்டது. இதைப் பார்த்த வீரப்பன், `இப்படி அடிக்கடி சட்டியை உடைத்துக்கொண்டிருந்தால் புதுச்சட்டி வாங்கிப் போட இங்கு பணம் கொட்டியா கிடக்கிறது ? இனி புதுச்சட்டி வாங்கித்தர முடியாது. எங்கேயாவது கெட்டுப் போ,` என்று கோபத்துடன் கூறினான்.

சிறுவன் வேலப்பன் தந்தை கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். தந்தையின் மீது அவனுக்கு ஆத்திரமாக வந்தது. அவனால் என்ன செய்ய முடியும்? சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை உதித்தது. வீட்டுக்குள் சென்றான். தந்தை வைத்திருந்த தச்சு வேலை கருவிகள் சிலவற்றை எடுத்து வந்தான். வெளியே வந்து மரத்தை உளியால் செதுக்கிக் கொண்டிருந்தான் வேலப்பன். என்றுமில்லாத வழக்கமாக மகன் தச்சு வேலை செய்து கொண்டிருப்பதைப் பார்த்து வீரப்பன் மகிழ்ச்சியடைந்தான். `என்ன செய்து கொண்டிருக்கிறாய்?` என்று மகனைப்

பார்த்து கேட்டான் வீரப்பன். `ஒரு மரச்சட்டி செய்து கொண்டிருக்கிறேன்,` என்றான் வேலப்பன். மரச்சட்டி எதற்கு என்று அவன் தந்தை கேட்டதற்கு, `உங்களுக்காகத்தான் செய்கிறேன். நீங்கள் வயதாகிக் கிழவராகி விட்டால் உங்களுக்குச் சாப்பாட்டுப் பாத்திரம் தரவேண்டுமல்லவா? மண் சட்டியாகயிருந்தால் உடைந்து விடும். அதற்காகத்தான் இப்போதே மரச்சட்டி செய்கிறேன்,` என்று வேலப்பன் மறுமொழி கூறினான். இதைக் கேட்டதும் வீரப்பனின் உள்ளமும் உடலும் குன்றிவிட்டன.

வயதான பிறகு தான் எப்படித் தந்தையை நடத்துகிறேனோ அதை போலவே தான் தன் மகனும் தன்னை நடத்துவான் என்பதை உணர்ந்தான். இவ்வெண்ணம் அவன் மனதில் தோன்றியது முதல் அவன் தன் தந்தையைக் கடிந்து கொள்வதில்லை. அவருக்கு நல்ல உணவு வகைகள் கொடுத்து வந்தான். தந்தையைத் திருத்துவதற்காகத் தனயன் கையாண்ட தந்திரம் பலித்தது.

**Q36 முதல் Q41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 மதிப்பெண்கள்)**

Q36 வீரப்பனின் தந்தை ஏன் வீரப்பனின் வீட்டில் தங்கியிருந்தார் ?
*( 3 மதிப்பெண்கள்)*

வீரப்பனின் தந்தை மிகவும் வயதானவர். அவரால் முன்போல் ஓடியாடி வேலை செய்ய முடியாததால், வீரப்பனின் தந்தை வீரப்பனின் வீட்டில் தங்கியிருந்தார்.

Q37 வீரப்பன் தன் தந்தைக்கு நோய் வந்தபோது அவரை எப்படி நடத்தினான் ? ( 3 மதிப்பெண்கள்)

Q38 வீரப்பன் தன் தந்தைக்கு மண்சட்டி வாங்கிக் கொடுக்க காரணம் என்ன ? ( 3 மதிப்பெண்கள்)

Q39 வீரப்பன் தன் தந்தையை ஏன் ஏசினான் ? ( 3 மதிப்பெண்கள்)

Q40 வேலப்பன் தன் தந்தையிடம் எதற்காக மரச்சட்டி செய்வதாகக் கூறினான் ? ( 4 மதிப்பெண்கள்)

Q41 வீரப்பன் மனதில் தோன்றிய எண்ணம் என்ன ? ( 4 மதிப்பெண்கள்)

**P6 SA1**
**TESTPAPER 10**

ராகுல் தன் நண்பன்...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 2 | 2) 3 | 3) 3 | 4) 4 | 5) 1 | 6)2 |
| 7) 2 | 8) 4 | 9) 3 | 10) 1 | 11) 4 | 12) 3 |
| 13) 3 | 14) 2 | 15) 1 | 16) 4 | 17) 2 | 18) 2 |
| 19) 2 | 20) 4 | 21) 3 | 22) 2 | 23) 3 | 24) 8 |
| 25) 7 | 26) 10 | 27) 9 | 28) 3 | 29) 2 | 30) 8 |
| 31)5 | 32) 10 | 33) 12 | 34) 7 | 35) 9 | |

36)வீரப்பனின் தந்தைக்கு வயதாகி விட்டதால் அவரால் ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. அதனால் அவர் வீரப்பனில் வீட்டில் தங்கியிருந்தார்.

37)வீரப்பன் தன் தந்தைக்கு நோய் வந்த போது அவருக்காகத் தனி இடம் அமர்த்தி அங்கிருந்து அப்படி இப்படி நகரக் கூடாது என்று கட்டளை இட்டான்.

38) வீரப்பனின் தந்தைக்கு கடுமையான நோய் கண்டது. அதனால் அவர் சாப்பிடும் தட்டு முதலியவற்றை மற்றவர்கள் தொடக்கூடாது என்ற எண்ணமே அவன் தன் தந்தைக்கு மண் சட்டி வாங்கிக் கொடுக்கக் காரணம் ஆகும்.

39)வீரப்பனின் தந்தை சாப்பாட்டுப் பாத்திரத்தை எடுத்த போது அது கை தவறி கீழே விழுந்து உடைந்து விட்டதால் அவன் தன் தந்தையை ஏசினான்.

40)வீரப்பனுக்கு வயதாகி கிழவராகி விட்டால் சாப்பிடுவதற்கு மண் சட்டி கொடுத்தால் அது கீழே விழுந்து உடைந்து விடும். ஆனால் மரச்சட்டி உடையாது என்பதால் தான் வேலப்பன் தன் தந்தையிடம் அவருக்கு இப்போதே ஒரு மரச்சட்டி செய்வதாகக் கூறினான்.

41)வீரப்பனின் மனதில் வயதான பிறகு தான் எப்படி தந்தையை நடத்துகிறேனோ அதைப் போலவே தான் தன் மகனும் தன்னை நடத்துவான் என்ற எண்ணம் தோன்றியது.